# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 1982/33 - 2016 සැප්තැම්බර් මස 01 වැනි බ්‍රහස්පතින්දා - 2016.09.01

*1982/33 ஆம் இலக்கம் - 2016 ஆம் ஆண்டு செத்தெம்பர் மாதம் 01 ஆந் திகதி வியாழக்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

## பகுதி I : தொகுதி (I)- பொது

## அரசாங்க அறிவித்தல்கள்

*ச.வ.பீ. 1/2011*

**2006 ஆம் ஆண்டின் 27 ஆம் இலக்க, புகையிலை மற்றும் மதுசாரம் மீதான தேசிய அதிகாரசபைச் சட்டம்**

*2006 ஆம் ஆண்டின் 27 ஆம் இலக்க, புகையிலை மற்றும் மதுசாரம் மீதான தேசிய அதிகார சபைச் சட்டத்தின் 33 ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் 30 ஆம் பிரிவின் கீழ் சுகாதார, போசாக்கு மற்றும் சுதேச வைத்திய அமைச்சரினால் ஆக்கப்படும் ஒழுங்குவிதிகள்.*

ராஜித சேனாரத்ன,
சுகாதார, போசாக்கு மற்றும் சுதேச
வைத்திய அமைச்சர்.

கொழும்பு,
*2016, ஓகத்து 31.*

ஒழுங்குவிதிகள்

1. இவ்வொழுங்குவிதிகள் 2016 ஆம் ஆண்டின் ........... ஆம் இலக்க, தடைசெய்யப்பட்ட புகையிலை உற்பத்திப் பொருட்கள் பற்றிய ஒழுங்குவிதிகள் என எடுத்துக்காட்டப்படலாம்.

2. புகையினை பிறப்பிக்காததான புகையிலை உற்பத்தி பொருட்களின் வகுதிகள் இதற்கான அட்டவணை I இல் குறித்துரைக்கப்பட்டனவாறாதல் வேண்டும்.

3. ஆளெவரும், இதற்கான அட்டவணை I மற்றும் II இல் குறித்துரைக்கப்பட்ட ஏதேனும் புகையிலை உற்பத்திப் பொருளை உற்பத்தி செய்தலோ, இறக்குமதி செய்தலோ, விற்பனை செய்தலோ அல்லது விற்பனைக்கு முனைதலோ ஆகாது.

4. இவ்வொழுங்குவிதிகளில் -

"புகையற்ற புகையிலை உற்பத்திப்பொருள்" என்பது, புகையினை உற்பத்தி செய்யாததான ஏதேனும் புகையிலை உற்பத்திப் பொருள் என்று பொருளாகும்.

***அட்டவணை I***

(அ) புகையிலையினைக் கொண்டுள்ள ஏதேனும் புகையற்ற புகையிலை உற்பத்திப் பொருள் அல்லது கலவை ;

***அட்டவணை II***

(அ) புகையிலையினைக் கொண்டுள்ள ஏதேனும் சுவையூட்டப்பட்ட, நிறமூட்டப்பட்ட அல்லது இனிப்பூட்டப்பட்ட சிகரெட் ;

(ஆ) புகையிலையினைக் கொண்டுள்ள ஏதேனும் இலத்திரனியல் சிகரெட்.

*9 - 679*



இவ் அதிவிசேட வர்த்தமானியை www.documents.gov.lk எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.